

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஏப்ரல் 26, 2018 | புரட்சி 17 | முழக்கம் 15 | விலை: ரூ.3.00


# மதவெறி, ஆணாதிக்க சிந்தனைகளை அழித்தொழிக்க கோபி கழக மகளிர் மாநாடு அறைகூவல்






**திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு வடக்கு மாவட்டம் சார்பாக கோபிசெட்டிபாளையத்தில்15.04.2018 ஞாயிறு அன்று 'பெண்ணே எழு விடுதலை முழக்கமிடு' மகளிர்தின மாவட்ட மாநாடு பெரியார் திடலில் நடைபெற்றது.**

மாநாட்டின் முதல் நிகழ்வாக நிமிர்வு கலைக் குழுவினரின் பறை இசை நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து கோவை இசைமதி மற்றும் திருப்பூர் பெரியார் பிஞ்சு யாழினி ஆகியோர் பெரியார் மற்றும் அம்பேத்கர் சிந்தனைப் பாடல்களைப் பாடினார்கள். அதனைத் தொடந்து பெண்கள் பங்கேற்ற வழக்காடு மன்றம் நடைபெற்றது. அதில் பெண்கள் ஒவ்வொரு இடத்திலும் எவ்வாறு அடிமைப்படுத்தப்படு கிறார்கள் என்பது பற்றியும் அதற்கான தீர்வு குறித்தும் வழக்காடு மன்றம் நடைபெற்றது. கலை நிகழ்ச்சிகள் முடிவுற்றதும் பொதுக் கூட்டம் தொடங்கியது. நிகழ்விற்கு மணிமொழி தலைமை ஏற்க கோமதி வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து சிவகாமி மாநாட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தார். ஆவணப்பட இயக்குனர் திவ்யபாரதி, தமிழ்நாடு அறிவியல் மன்ற ஒருங்கிணைப்பாளர் சிவகாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாநாட்டு சிறப்புரை யாற்றினார்கள். நதியா நன்றி கூறினார்.

மாநாடு சிறப்பாக நடைபெற களப் பணியாற்றிய பெண் தோழர்களுக்கு கழகத் தலைவர் நினைவுப் பரிசு வழங்கி சிறப்பு செய்தார். மாநாட்டில் சிறப்புரை ஆற்றிய திவ்யபாரதிக்கு பிரேமா, சிவகாமிக்கு நாத்திக இராணி, கழகத் தலைவருக்கு கற்பகம் ஆகியோர் நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள்.

மாநாட்டில் ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பிரச்சார வாகனத்தை அறிமுகம் செய்து இனிவரும் மாதங்களில் கிராமப் பிரச்சாரம் தொடர்ந்து நடைபெற இவ்வாகனம் பயன்படுத்தப் படும் என கழகத்தின் மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் அறிவித்தார். மாநாட்டின் இறுதி வரை பொது மக்கள்மற்றும் தோழர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர். அனைவருக்கும் 'கோமாதா' பிரியாணி பரிமாறப் பட்டது. மாநாடு சிறப்பாக நடைபெற கழக ஆண் மற்றும் பெண் தோழர்கள் சிறப்பாக களப்பணி யாற்றினார்கள்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

### காவிரி மேலாண்மை வாரியம்

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்கு ஆதாரமாகவும், தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களுக்குக் குடிநீராகவும் பயன்படும் காவேரிநீரை, (அளவில் குறைவாக இருப்பினும்,) கர்நாடக அரசிடம் இருந்து நிரந்தரமாகக் கிடைக்கும் வகையில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னரும் சொந்த அரசியல் லாபங்களுக்காக காவேரி மேலாண்மை வாரியம் அமைக்காமல் காலம் தாழ்த்தும் மத்திய அரசுக்கு இம்மாநாடு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.. மத்திய அரசு மேலும் காலந்தாழ்த்தாமல் உடனடியாக காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி ஒழுங்காற்றுக் குழுவையும் அமைத்திட வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்திப் போராடிய அனைத்துக் கட்சிகளுக்கும், அமைப்புகளுக்கும், கலைத் துறையினருக்கும் இம்மாநாடு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. தமிழ்நாட்டின் உரிமை களுக்காகப் போராடியவர்கள்மீது புனையப்பட் டுள்ள அனைத்து வழக்குகளையும் நிபந்தனை இல்லாமல் திரும்பப் பெற வேண்டுமெனத் தமிழக அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது

தமிழ்நாட்டின் வேளாண்மையையும், நீர் ஆதாரங்களையும், கனிம, இயற்கை வளங்களையும், மக்களின் வாழ்வாதாரத்துக்கும் சுற்றுச் சூழலுக்கும் கேடு விளைவிக்கும் திட்டங்களான சாகர்மாலா, அணு உலைகள், ஸ்டெர்லைட், மீத்தேன், ஹைட்ரோ கார்பன், நியூட்ரினோ, பன்னாட்டு பானங்கள் தயாரிப்பு, இரசாயன ஆலைகள் போன்ற நாசகாரத் திட்டங்களைத் திணிக்கும் அரசுகளுக்கு எதிரான போராட்டங்களை, தமிழ்நாட்டை, தமிழ் மக்களைப் பாதுகாக்கும் போராட்டங்கள் என்ற புரிதலோடு அனைத்து தரப்பினரும் பங்கேற்குமாறு வேண்டிக்கொள்கிறது.

### கோபியில் அம்பேத்கர் சிலை நிறுவுக

இந்தியத் துணைக்கண்டத்தின், இந்து மதத்தின் பெரும் சமூகத் தீங்கான படிநிலை ஜாதிய அமைப்புக்கு எதிராகவும், தீண்டாமைக் கொடுமை களுக்கு எதிராகவும் பல தத்துவப் போராட்டங் களையும், சட்டப் போராட்டங்களையும், மக்கள் போராட்டங்களையும் நடத்தியவரும், இந்தியாவின் அரசியல் சட்ட வரைவுக்குழுத் தலைவராகவும், இந்தியாவின் முதல்சட்ட அமைச்சராகவும் விளங்கியவரும் ,எல்லா இந்துக்களுக்கும், குறிப்பாக பெண்களுக்கு சம உரிமை அளிக்கும் இந்து சட்ட மசோதாவை நிறைவேற்றாததையும், பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்க ஆணையம் அமைக்காததையும் காரணங்களாகக் கூறி மத்திய சட்ட அமைச்சர் பதவியை, விட்டு விலகியவருமான புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுக்கு, ஜாதி ஒழிப்பைத் தன்வாழ்நாள் பணியாகக் கொண்டு செயல்பட்ட பகுத்தறிவுப் பகலவன் பெரியார் பிறந்த மாவட்டமான ஈரோட்டில் சிலை ஏதும் இல்லை என்பது பெரும் அவமானகரமானதாகும். எனவே கோபிச்செட்டிப்பாளையம் நீதிமன்ற வளாகத்தில் அவருக்கு முழு உருவச்சிலை அமைத்திட மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லையெனில் திராவிடர் விடுதலைக்கழகத்தின் முன்முயற்சியில் அனைத்து முற்போக்கு இயக்கங்களையும் ஒருங்கிணைத்து புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுக்கு சிலை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் இம்மாநாடு அறிவித்துக் கொள்கிறது.

### பெண்களுக்கு தற்காப்புக் கலை

அண்மைக்காலமாக தலித் மற்றும் சிறுபான்மைப் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாவதும், பாலியல் கொலைகளுக்கு ஆளாவதும் அதிகரித்து வருகிறது. இதனைத் தடுத்திட பெண்களுக்கு கல்விக்கூடங்களில் அடுத்தக் கல்வியாண்டிலேயே தற்காப்புக் கலைகளைக் கற்றுக் கொடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இம்மாநாடு வலியுறுத்துகிறது.

எண்பது ஆண்டுகளுக்கு முன்னரே பெரியார் பெண்குழந்தைகளுக்குக் கும்மி, கோலம், கோலாட்டம், வீணை, பாட்டு, நாட்டியம் ஆகியவற்றைச் சொல்லிக் கொடுப்பதை விட்டுவிட்டு மல்யுத்தம், குஸ்தி, தேகப்பயிற்சி, உயரம் தாண்டுதல் போன்றவற்றைக் கற்றுக் கொடுங்கள் என்று கூறியதை நினைவூட்டி அவ்வறிவுரையைத் தற்போதைய சூழலுக்கேற்ப கராத்தே, குங்பூ, கால்பந்தாட்டம், சிலம்பாட்டம் போன்றவற்றையும் இணைத்துக் கொண்டு பின்பற்றுமாறு பெற்றோர்களையும், பெண்களையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

### 33 சதவீத ஒதுக்கீடு

இந்திய நாட்டின் மக்கள் தொகையின் சரிபாதி பெண்கள் இருக்கின்றனர், நியாயப்படி பெண்கள் நாட்டின் ஆட்சி நிர்வாக பொறுப்புகள் அனைத்திலும் 50% இடஒதுக்கீடு வழங்க வேண்டும். ஆயினும் தற்போது பாராளுமன்றத்தில் 33% இட ஒதுக்கீடு கோரும் மசோதா வெகு காலமாகத் திட்டமிட்டு கிடப்பில் போடப்பட்டுள்ளதைக் கண்டிப்பதோடு அம்மசோதாவை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என அனைத்துக் கட்சித் தலைவர்களையும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

### ஆணாதிக்க சிந்தனைகள்

பெண்களைப் போகப் பொருளாக சித்தரிக்கும் போக்கினை மதங்களும், ஆணாதிக்க சிந்தனைகளும் தொடந்து செய்து வருகின்றன. அதன் விளைவாகவே

(4ஆம் பக்கம்)







# ஏப்.30 – சென்னை மாநாடு தோழர்களே திரளுவீர்!

ஏப்.30 – சென்னை மாவட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம் மற்றும் தந்தை பெரியார் திராவிடர் கழகத்துக்கு அடித்தளமாகச் செயல்பட்டு ‘எதிரிகள் – துரோகிகளால்’ வஞ்சகமாக படுகொலை செய்யப்பட்ட களப்பணியாளர் பத்ரிநாராயணன் நினைவு நாள்.

(பத்ரி நாராயணன் குறித்த கட்டுரை ஒன்றை இதே இதழில் வேறு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்)

பத்ரியின் நினைவு நாளில் சென்னையில் மண்டல மாநாட்டையும், திராவிடர் விடுதலைக் கழகம் நடத்துகிறது.

‘நிலம் பாழ் – நீர் மறுப்பு – ‘நீட்’ திணிப்பு – தன்மான தன்னுரிமை மீட்பு மாநாடு’ என்று காலத்தின் தேவைக்கேற்ற தலைப்போடு மாநாடு நடக்கிறது.

மாநாட்டை விளக்கி நகரம் முழுதும் சுவரெழுத்துகளை தோழர்கள் எழுதி வருகிறார்கள். மாநாட்டின் நோக்கம் காவிரிப் பிரச்சினையில் மத்திய அரசு தமிழகத்துக்கு இழைத்த அநீதிகளை விளக்கி இது வரை 50,000 துண்டறிக்கைகளை மாநகர் முழுதும் தோழர்கள் பகுதி பகுதியாகச் சென்று மக்களிடம் வழங்கி, நிதி திரட்டி வருகிறார்கள்.

கழகச் செயல் வீரர்கள் ஒவ்வொரு நாளும் கழகக் கொடி துண்டறிக்கைகளுடன் புறப்பட்டு, பகுதி பகுதியாக ‘கருத்துப் பரப்பல் நிதி திரட்டல்’ என்ற இயக்கத்தை உற்சாகத்துடன் நடத்தி வருகிறார்கள். 10 ரூபாய், 20 ரூபாய் என்று சிறு சிறு நடைபாதைக் கடை நடத்தும் மக்களும் வணிகர்களும் நிதியாக வழங்கி தோழர்களை ஊக்கப்படுத்தி வருகிறார்கள்.

பா.ஜ.க. நடுவண் ஆட்சி மீது மக்கள் அடங்காத கோபத்துடன் இருப்பதை இந்த இயக்கத்தின் வழியாக உணர முடிகிறது என்று தோழர்கள் கூறுகிறார்கள். களப்பணிகளில் கழகத் தோழர்கள் உற்சாகமாக களமாடி வருவது மிகுந்த நம்பிக்கையையும் உற்சாகத்தையும் உருவாக்கி வருகிறது என்றால், அது மிகைக் கூற்று அல்ல.

சென்னையில் தொடங்கிய கழக மகளிர் மாநாடு, ஈரோடு, திருப்பூர், மேட்டூர், கோபி என்று தொடர்ந்து தோழர்களை உற்சாகத்தோடு களமிறக்கியது. இப்போது தமிழகத்தின் உரிமைகளை மறுக்கும் பார்ப்பன பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராகவும் தமிழகத்தின் தன்னுரிமை இலட்சியத்தை முன்னெடுக்கவும் சென்னையில் மண்டல மாநாட்டை கழகம் நடத்துகிறது.

கருத்தாழமிக்க செய்திகள் கலை நிகழ்வுகளோடு நடைபெற இருக்கும் மாநாடு தமிழ்நாட்டின் அடுத்தக்கட்ட செயல் நகர்வுகளுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக அமையும். தமிழகத்தின் இயற்கை வளச் சுரண்டல்களுக்கு எதிராகத் தொடர்ந்து களமாடி வரும் பேராசிரியர் ஜெயராமன், பெரியாரியலையும், தன்னுரிமைப் போராட்டத்தையும் முன்னெடுப்பதில் துடிப்புடன் களமாடி வரும் மே 17 இயக்கத்தைச் சார்ந்த திருமுருகன் காந்தி, கழகப் பொதுச் செயலாளர், கழகத் தலைவர் பங்கேற்றுப் பேசுகிறார்கள்.

காஞ்சி மக்கள் மன்றத்தின் புரட்சிகர கலை நிகழ்ச்சிகள் ‘களை’ கட்ட இருக்கின்றன. களப்பணியாளர் பத்ரி குறித்து நினைவுகளைப் பதிவு செய்யும் நூலை நமது மரியாதைக்குரிய தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் வெளியிடுகிறார்.

மண்டல மாநாடு என்றாலும் மாநாட்டின் முக்கியத்துவம் கருதி, மாநிலம் முழுதும் தோழர்கள் திரண்டு வர அழைக்கிறோம்.

தமிழ்நாட்டில் இப்போது திரும்புமிடமெல்லாம் ‘பெரியார் பெரியார்’ என்ற முழக்கமே கேட்கிறது. இளைஞர்கள் முதல் முதியோர் வரை பெரியாரின் இலட்சியச் சுடரைக் கையில் ஏந்தி விட்டார்கள். கலைத் துறைத் தமிழர்கள், இனி பெரியார் தத்துவங்களே தமிழர்களைப் பாதுகாக்கும் என்று முரசறையத் தொடங்கி விட்டார்கள்.

இப்படிப்பட்ட ஒரு காலத்தை உருவாக்கவே பெரியார் இயக்கம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு எத்தனையோ ஆண்டுகாலமாக எதிர்நீச்சல் போட்டு உறுதியோடு பயணித்தது. அதற்காகக் கடும் விலைகளைத் தந்தது.

அந்த உழைப்பு வீண் போகவில்லை; பெரியார் எனும் பேரெழுச்சி புது வெள்ளமாய் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கி விட்டது.

இந்த வெள்ளத்தின் ஓட்டத்தை மடை மாறாமல் கொள்கை திசை நோக்கி ஓட வைக்க வேண்டிய பொறுப்பு நமது கையில் தானே இருக்கிறது?

வரலாறு நமக்கு தந்திருக்கும் இந்த கடமையை நாம் தவற விடக் கூடாது; களத்தை மேலும் விரைவுபடுத்துவோம்!

மேலும் மேலும் தீவிரமாய்...

மேலும் மேலும் உற்சாகமாய் கூடுவோம்!

மாநாடுகளின் சந்திப்பும், உரையாடலும் நமக்குப் பாதையை செப்பனிட்டு புத்துணர்ச்சியை ஊட்டும் தானே!

வாருங்கள் தோழர்களே, சென்னையில் சந்திப்போம்!

# மருத்துவ சோதனைக்கு பலியாக்கப்படும் மனித உயிர்கள்!

சுற்றுச் சூழலைப் பாதிக்கக் கூடிய ஆபத்தான திட்டங்களை உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகள், இந்தியா போன்ற பின் தங்கிய நாடுகளிடம் கொண்டு வந்து திணிக்கின்றன. அன்னிய முதலீட்டு சுரண்டலுக்கு கதவு திறந்து வைத்திருக்கும், பார்ப்பன-பனியா நலன் காக்கும் இந்திய நடுவண் ஆட்சி, தொழில் வளர்ச்சி என்று கூறி, அத்தகைய ஆபத்தானத் திட்டங்களை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கிறது.

வேதாந்தா குழுமத்தின் ஸ்டெர் லைட் ஆலை அப்படி வந்த ஒன்று தான். நச்சுக் கழிவுகளை உருவாக்க, சாயப் பட்டறை, தோல் பொருள் உற்பத்திகள், வெளிநாட்டு ஏற்றுமதி களுக்காக தமிழகத்தை நஞ்சாக்கி வருகின்றன.

பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவின் விதி முறைகளை கண்மூடித்தனமாக மீறி செயல்படும் உரிமைகளையும், மாநில அரசுகள் வழங்கிக் கொண்டிருக்கின்றன.

இராஜஸ்தான் மாநிலத்தி லிருந்து ஒரு அதிர்ச்சியான செய்தி வந்திருக்கிறது.

இராஜஸ்தான் மாநிலத்தில் பீடாசர் பகுதியில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு மருந்து நிறுவனம் ஒன்று, அதுதயாரித்த மருந்துகளை எலிகளுக்குத் தந்து சோதனை செய்யும் முறைக்கு மாறாக நேரடியாக மனிதர்களுக்கே தந்து சோதனை நடத்தியிருக்கிறது. இந்த சோதனைகளுக்காக ஆட் களை நாளொன்றுக்கு ரூ.500 கூலி யாகத் தந்து, வேலைக்கு அமர்த்தி யுள்ளது. ஆபத்துகளை உணராத அந்த அப்பாவிகளிடம் மூன்று நாள், தான் தயாரித்த மருந்து களை உடலில் செலுத்தியிருக்கிறது அந்த நிறுவனம். 21 பேர் இப்படி மருந்து செலுத்தப்பட்டுள்ளனர். அதில் 16 பேர் நிலை கவலைக்கிடமாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர். அவர்கள் நிலை ஆபத்தானக் கட்டத்தில் இருப்பதாக மருத்துவமனை அறிக்கை கூறு கிறது.

வேத மதம் என்ற நஞ்சை மூளையில் செலுத்தி சமூகத்தில் ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ களாக ஒதுக்கி வைத்து உளவியல் ரீதியாக அடிமை யாக்கிய கூட்டம் இப்போது அன்னிய நாட்டின் மருந்துகளுக்கு சோதனைக் கருவிகளாக்கி, உயிரை யும் காவு கேட்கத் தொடங்கி விட்டது!

இப்படிப்பட்ட துணிச்சல், அந்த வெளிநாட்டு நிறுவனத்துக்கு எப்படி வந்தது? மாநில ஆட்சிகள் தங்கள் ‘கைப்பாவை’ என்ற திமிரால் வந்ததுதானே?

வேறு எந்த நாட்டிலாவது மருந்து நிறுவனங்கள் இப்படி செயல்பட முடியுமா? தேச பக்திக்கு குத்தகைக்காரர்கள் என்று உரிமை கொண்டாடும் பா.ஜ.க.ஆட்சி தான் இராஜஸ்தானில் நடக்கிறது.

அன்னிய நாட்டுக் கம்பெனி மருந்துகளை உடலுக்குள் செலுத்திய பிறகு அதற்கும் தாக்குப் பிடித்து உயிர் பிழைத்த வர்கள்தான் உண்மையான தேச பக்தர்கள். மாண்டு போனவர்கள் ‘தேசத் துரோகிகள்’ என்று இராஜஸ்தான் அரசு விளக்கம் கூறுமோ?

மனித உயிர்களுக்கு இதுதான் மரியாதையா?

# தூக்குத் தண்டனை தீர்வு அல்ல!

12 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளை கட்டாய பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்குகிறவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கும் அவசர சட்டம் ஒன்றைக் குடியரசுத் தலைவர் பிறப்பித்திருக்கிறார்.

ஜம்முவில் கத்துவா பகுதியில் முஸ்லிம் நாடோடி சமூகத்தைச் சார்ந்த ஆசிஃபா என்ற எட்டு வயதுப் பெண், ஜம்மு பண்டிட்டுகளால் (பார்ப்பனர்களால்) காவல்துறை ஒத்துழைப்புடன் கூட்டுப் பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கி, சித்திரவதை செய்து கொலை செய்த நிகழ்ச்சி, சர்வதேச அளவில் மோடி ஆட்சியின் மானத்தைக் கப்பலேற்றிவிட்டது. அதற்கு எதிர்வினையாக இந்த அவசர சட்டம் வெளி வந்திருக்கிறது.

தூக்குத் தண்டனை என்ற தண்டனையே சட்டப் புத்தகத்திலிருந்து நீக்க வேண்டும் என்று அய்.நா. உட்பட உலக நாடுகளிலிருந்து வலிமையான குரல் எழுப்பப்பட்டு வருகிறது. சட்டத்தில் தூக்குத் தண்டனை இருப்பதாலேயே குற்றங்கள் குறைந்து விடுவதில்லை என்பதையும் ஆய்வுகள் உணர்த்தி வருகின்றன.

கத்துவாவில் ஆசிபா பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கோரமாகப் படுகொலை செய்யப்பட்டதை பாலுறவு வன்முறை சம்பவமாக மட்டுமே குறுக்குவதே தவறான பார்வை. பா.ஜ.க. இதை ஒரு கிரிமினல் குற்றம் என்றே இந்தச் சம்பவத்தை சித்தரித்து இதற்குப் பின்னால் உள்ள இஸ்லாமிய வெறுப்பு அரசியலை மூடி மறைக்கப் பார்க்கிறது.

ஜம்மு பகுதி முழுமையாக ‘இந்து’க்களுக்கானது என்று சொந்தம் கொண்டாடும் காஷ்மீர் பார்ப்பனர்கள் (பண்டிட்டுகள்) அப்பகுதியில் நாடோடி இஸ்லாமியர்களான ‘பேக்வார்’ சமூகத்தினர் தற்காலிகமாகக் கூடாரமடித்துத் தங்குவதைக்கூட அனுமதிக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் நடத்திய அச்சுறுத்தல்தான் ஆசிஃபா கோரக் கொலை. இந்த மத வெறுப்பு அரசியலைத் துண்டித்துவிட்டு, பாலுறவு வன்முறையாக மட்டுமே சித்தரிக்க முயலும் சங் பரிவார், தங்களது நிலைப்பாட்டை நியாயப்படுத்தவே இந்த அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறது.

வேத மதமான பார்ப்பனிய இந்து மதம், பெண்களின் சமத்துவத்தை மறுக்கிறது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இன்றும்கூட ஒரு பெண் ‘சுயம் சேவக்காக’ முடியாது. அதன் முன்னணி அமைப்புகளில் மட்டும் பெண்களை சேர்க்கிறார்கள். மதத் தடைகளை எதிர்த்து பெண்களுக்கான கல்வி, அதிகார உரிமைகளை வழங்கவும், அதற்கு மக்களை தயார்ப்படுத்துவதற்குமான விழிப்புணர்வு இயக்கங்களை நடத்த வேண்டும்.

தூக்குத் தண்டனைச் சட்டங்களால் பெண் குழந்தை மீதான பாலுறவு வன்முறைகளைத் தடுத்து விடலாம் என்று கருதிட முடியாது. அரிதினிலும் அரிதான வழக்குகளில் தூக்குத் தண்டனை வழங்கும் சட்டம் இப்போதும் நடைமுறையில்தான் இருக்கிறது. அதற்காகக் கொலைகள் நின்று போய் விட்டதா? ஒரு சமூகம் ஏன் குற்றங்களை இழைக்கும் மனநிலைக்குத் தள்ளப்படுகிறது? அதற்குப் பின்னால் உள்ள மதவெறி மற்றும் அரசியல் சமூகப் பொருளாதாரக் காரணிகளை நீக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமே தவிர, தூக்குத் தண்டனை அதற்குத் தீர்வாகிட முடியாது.

# களப் போராளி பத்ரியின் நினைவுச் சுவடுகள்

1996ஆம் ஆண்டு ஜூன் 16ஆம் நாள் சென்னையில் பெரியார் சிலை முன் 120 திராவிடர் கழக இளைஞர்கள் பழைய கருப்புச் சட்டையை கழற்றி புதிய கருஞ்சட்டை அணிந்து திராவிடர் கழகத்திலிருந்து விலகி பெரியார் திராவிடர் கழகமாக செயல்பட உறுதி ஏற்றனர். அந்த நிகழ்வுக்கு நான் தலைமை தாங்கினேன். அந்த 120 இளைஞர்களில் பெரும்பான்மை இளைஞர்கள் இராயப்பேட்டையில் பெரியாரியலை முன்னெடுத்த களப்பணியாளர் தோழர் பத்ரி நாராயணனால் உருவாக்கப் பட்டவர்கள்.

இந்தப் புதிய அமைப்பு, திராவிடர் கழகம் நடைபோட்ட பாதையிலிருந்து விலகி புதிய திசையில் பயணித்து இயக்கப் போக்கில் பண்பு மாற்றங்களை உருவாக்கியது என்றே சொல்லலாம். அதில் முதன்மையான கூறு பார்ப்பன ஆதிக்க எதிர்ப்போடு நின்றுவிடாமல் பார்ப்பனீயத்தை உள்வாங்கி ஜாதி வெறியோடு பட்டியலின மக்களுக்கு எதிராக நின்ற இடைநிலை ஜாதிகளின் பார்ப்பனீயத்தையும் இணைத்து எதிர்க்க வேண்டும் என்பதாகும். பட்டியல் இனப்பிரிவு மக்களின் போராட்டங்களோடு கரம் கோர்த்த பெரியார் திராவிடர் கழகம் தோழமை சக்தியாக மட்டும் நின்றுவிடாமல் அம்மக்களுக்கான போராட்டங்களையும் தீவிரமாக முன்னெடுத்தது.

அசைக்க முடியாத பார்ப்பனக் கோட்டையாக அதிகாரத் திமிருடன் வலம் வந்த சென்னை அய்.அய்.டி.யின் தலித் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்தது. தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் தலையிட்டு நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழலை உருவாக்கியதோடு தலித் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த அறிவுஜீவிகளையும் முற்போக்கு இயக்கங்களையும் ஒரே குடையின் கீழ் இணைத்து அதில் வெற்றியும் கண்டது. பெரியார் திராவிடர் கழக ஒருங்கிணைப்பில் சமூக நீதி மீட்பு இயக்கம் உருவானது. அப்படி பெரியார் திராவிடர் கழகம் பட்டியலினப் பிரிவினரின் ஆதரவு நிலை எடுத்துப் போராட வேண்டும் என்ற கருத்தில் உறுதியாக நின்றவர் பத்ரி நாராயணன். அதே போல் இஸ்லாமியர்களின் ஆதரவு நிலைப்பாட்டிலும் உறுதி காக்க வேண்டும் என்பதில் அவர் முனைப்புக் காட்டினார்.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலின் போது இஸ்லாமியர்களை பயங்கரவாதிகளாக மேற்குலகம் சித்தரித்தது. அந்தச் சூழலில் சென்னையில் அன்றைய தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட இஸ்லாமிய அமைப்புகளுடன் இணைந்து தொடர் கூட்டங்களை பெரியார் திராவிடர் கழகம் நடத்தியது. அந்தக் கூட்டங்களை இஸ்லாமியர் அமைப்புடன் கலந்து பேசி ஒருங்கிணைத்தவர் பத்ரி நாராயணன்தான். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகர அரசியலை அந்த மேடைகள் அம்பலப்படுத்தின.

இராயப்பேட்டையில் “வி.எம்.தெரு” பகுதி பல குறுகிய சாலைகளையும் நெரிசலான வீடுகளையும் கொண்டிருக்கும் பகுதி. ஒரு காலத்தில் சமூக விரோத செயல்பாடுகள், போதைப் பொருள் விற்பனை என்று இளைஞர்கள் திசை மாறிப்போய் காவல்துறையின் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாகியிருந்த பகுதி. அந்தப் பகுதியில் பெரியார் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட பத்ரி நாராயணன், ஏராளமான இளைஞர்களை பெரியாரியல் பாதைக்குத் திருப்பினார். அவர்களிடம் பொது ஒழுக்கத்தை வளர்த்தெடுத்தார். அவர்கள் சுக துக்கங்களில் பங்கேற்றார்.

‘வன்னியர் - யாதவர்’ என்ற இடைநிலைச் சாதியினர் அதிகமாக வாழும் அந்தப் பகுதியில் இளைஞர்களிடையே ஜாதி ஒழிப்புக் கருத்தியலுக்கு முன்னுரிமை தந்து களமாடினார். ஜாதி மறுப்புத் திருமணங்கள் ஏராளமாக நடைபெறத் தொடங்கின. அந்தத் திருமண நிகழ்வுகளில் திருமணத்துக்கான அழைப்பிதழ்களில் பெரியார் படத்துடன் அம்பேத்கர் படத்தையும் போடுவதை வழக்கத்திற்கு கொண்டு வந்தவர் பத்ரி. பெரியார் திராவிடர் கழகத்தின் சுவரொட்டிகள் எதுவாக இருந்தாலும் பெரியார் படத்துடன் அம்பேத்கர் படமும் இணைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். பத்ரி பிறப்பால் ‘தலித்’ அல்ல. ஆனால் ஜாதி அடையாளம் கடந்து சுயஜாதி மறுப்போடு செயல்பட்டவர்.

பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்பட்ட பிறகு அதில் இணைத்துக் கொண்ட இளைஞர் களின் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வுகள் ஏராளம் நடந்தன. அவை பெரும்பாலும் ஜாதி மறுப்புத் திருமணங்களாகும். அத்திருமணங்களை முன்னின்று ஏற்பாடு



செய்தவர் பத்ரி. ஆனூர் செகதீசன் தலைமையில் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் தான் மணவிழாக்கள் நடந்தன. பத்ரி நாராயணன் - சுதா இணையரின் திருமணமும் அந்த காலக்கட்டத்தில் தான் நடந்தது (28.11.96) திருமணத்துக்குப் பிறகு பத்ரி தனது துணைவியார் தாயாருடன் குடியிருந்தது இராயப்பேட்டையில் உள்ள சின்னஞ்சிறு ‘ஒற்றைக் குடித்தன’ வீடு. அது தான் பெரியார் திராவிடர் கழகத்தின் தலைமையகமாக பதியப்பட்டது. (61, வெங்கடாசலம் தெரு, இராயப்பேட்டை)

பத்ரிநாராயணன் திராவிடர் கழகத்தில் தீவிரமாக இளைஞரணியில் செயல்பட்ட காலத்தில் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள பெரியார் அறக்கட்டளைக்குச் சொந்தமான வணிக வளாகத்தில் மார்வாடி வர்த்தகர் ஒருவர் வீண் தகராறுகளை உருவாக்கினார். அது அடிதடி கலவரமாகியது. அப்போது தனது பகுதித் தோழர்களுடன் மார்வாடிக்கு எதிராக களமிறங்கிய பத்ரியை மார்வாடியின் அடியாட்கள் தனிமைப்படுத்தி கடையின் கதவை மூடி உள்ளே மூர்க்கத்தனமாகத் தாக்கினர். உடல் முழுதும் சுமார் 20 தையல் போடப்பட்ட நிலையில் பெரியார் திடலில் உள்ள பெரியார் நினைவிடத்தில் பத்ரி தோழர்களோடு அமர்ந்திருந்தபோதுதான் நான் அவரை முதன்முதலாக சந்தித்து உரையாடினேன். அப்போது நான் ‘விடுதலை’ ஏட்டில் பணியாற்றி வந்தேன்.

திராவிடர் கழக இளைஞரணியில் செயல்பட்ட போது அவரது முயற்சியால் வி.எம்.தெரு சந்திப்பில் வைக்கப்பட்டதுதான் பெரியார் சிலை. அந்த சிலை திறப்பு விழாவில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி பங்கேற்றார். அப்போது அரசியல் அணிகளில் ‘எதிரும்-புதிருமாக’ இருந்த கட்சிகளின் பகுதித் தலைவர்கள் அனைவரையும் சிலை திறப்பு விழாவில் பங்கேற்க வைத்து, ஒரே மேடையில் ஏற்றி பெரியார் சிலை அப்பகுதி வாழ் மக்களின் முழுமையான ஆதரவோடு நிறுவப்படுகிறது என்பதை உணர்த்திக் காட்டினார். அனைத்துக் கட்சிப் பொறுப்பாளர்களும் பத்ரியின் நேர்மை, பொது ஒழுங்கு, ஓடிச் சென்று உதவிடும் பண்புகளால் ஈர்க்கப்பட்டு அவரிடம் பெருமதிப்புக் காட்டினர். அதுவே கழகத்தின் வளர்ச்சிக்கும் உரமாக அமைந்தது. தனது சொந்த நலனுக்கு இயக்கத்தைப் பயன்படுத்தாத உயர்ந்த பண்பும், ‘பணம் கொடுக்கல் வாங்கல்’ என்ற நாணய ஒழுங்கில் நூறு சதவீத நேர்மையும் அவரிடமிருந்தது. தனது குடும்ப வருமானத்துக்காக அவர் அவ்வப்போது திறந்த மாலை நேர பிரியாணிக் கடைகளையும் உணவு விடுதிகளையும் தொடர்ந்து நடத்த முடியாமல் மூட வேண்டியதாயிற்று. ஒவ்வொரு முறையும் கழகத்தின் பெரிய நிகழ்ச்சிகள் நடக்கும்போது இயக்கப் பணியால் கடையை கவனிக்க முடியாமல் மூடப்படுவது வழக்கமானது.

இராயப்பேட்டை பெரியார் சிலை இருக்கும் பகுதியைச் சுற்றி, பிரபலமான நாகாத்தம்மன் கோயில் இருக்கிறது. கோயிலுக்கு வரும் பக்தர்கள், கோயில் நிர்வாகிகள் இன்று வரை கழகத்திடம் நல்லுறவு பேணும் பண்பாடு தொடர்கிறது என்றால், அதற்கு வித்திட்டது பத்ரிதான்.

பகுதி மக்கள் ஆதரவோடு கழகத்தின் கோட்டையாகியது இராயப்பேட்டை. மதவாத சக்திகள் நுழைய முடியாத அப்பகுதியில் வினாயகன் சிலை ஊர்வலத்துக்காக விநாயகன் சிலையை அப்பகுதியில் நிறுவ இந்து முன்னணி திட்டமிட்டு, திடீரென்று இந்து முன்னணித் தலைவர் இராம கோபாலன் ‘அடியாட்களை’த் திரட்டிக் கொண்டு பகுதிக்குள் வர இருந்தார். நாகாத்தம்மன் கோயில் அர்ச்சகர் இது பற்றி தமக்கு ஏதும் தெரியாது என்று கூறியதோடு, மதக் கலவரம் இல்லாத பகுதியில் விநாயகன் சிலை வைப்பதைத் தாம் விரும்பவில்லை என்று கைப்பட கடிதம் எழுதி பத்ரியிடம் தந்தார். பகுதி தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட அத்தனை கட்சிப் பிரமுகர்களும் இந்தப் பகுதியில் விநாயகன் சிலை வேண்டாம் என்று கையெழுத்திட்டு கடிதம் தந்தனர். கோயில் அர்ச்சகர் கடிதம், பகுதி வாழ் கட்சித் தலைவர்கள் கடிதத்தோடு காவல்துறையிடம் புகார் அளிக்க தோழர்களுடன் பத்ரி போனார். காவல்துறையினரும் அது குறித்து தங்களுக்கே தெரியாது என்று கூறினர். எதிர்ப்புகளை மீறி இராமகோபாலன் ஒலி பெருக்கி முழக்கங்களுடன் பகுதியில் விநாயகன் சிலை நிறுவ நுழைந்தபோது, “பதற்றத்தை உருவாக்க வேண்டாம் திரும்பிப் போய் விடுங்கள்” என்று இராமகோபாலனிடம் பத்ரி தலைமையில் தோழர்கள் அமைதியாக வேண்டுகோள் வைத்தனர். உடன் வந்த அடியாட்கள், ஆயுதங்களை எடுத்துத் தாக்கத் தொடங்கியவுடன், கழகத் தோழர்கள் திருப்பித் தாக்கினர். தாக்க வந்தவர்கள் ஓட்டம் பிடித்தனர். ‘இராமகோபாலன் பயந்து நாகாத்தம்மன் கோயிலுக்குள் ஓடிப் போய் பதுங்கிக் கொண்டு கதவை சாத்திக் கொண்டார்’ என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இராயப்பேட்டையின் சக்தியை பார்ப்பனர்கள் உணர்ந்தனர்.

பகுதி மக்களை கட்சி மாறுபாடின்றி தமிழர்களாக ஒருங்கிணைக்கும் முயற்சியின் ஒரு செயல்பாடுதான் பத்ரி தொடங்கிய தமிழர் திருநாள் விழா கொண்டாட்டம். அனைத்துக் கட்சியினரையும் இணைத்து பொங்கல் விழாக் குழுவை உருவாக்கி, ஜனவரி 12ஆம் நாள் பொங்கல் விழா நடத்தும் மரபைத் தொடங்கினார். அந்த விழா பெரியார் கருத்து பரப்பும் கலை விழாவாகவே நடக்கும். இன்று வரை அவர் தொடங்கி வைத்த அந்த விழா 18 ஆண்டுகளாக தொய்வின்றி கழகத் தோழர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

2001ஆம் ஆண்டு ஆனூர் செகதீசன், கொளத்தூர் மணி, கோவை இராமகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் செயல்பட்ட பெரியார் அமைப்புகள் ஓரணியாக இணைந்து, ‘தந்தை பெரியார் திராவிடர் கழகமாக’ செயல்படத் தொடங்கியபோது அதுவரை மாத இதழாக வெளிவந்த ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார இதழாக கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. 2001 ஜனவரியில் அசோக் நகரில் தோழர் மு. பாலகுரு நடத்திய தமிழர் திருநாள் விழா நிகழ்ச்சியில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார ஏட்டின் முதல் இதழை - அவ்விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தி.மு.க.வின் மூத்த தோழர், முன்னாள் சென்னை மேயர் சா. கணேசன் வெளியிட்டார். (அண்மையில்தான் அவர் தனது 85ஆம் அகவையில் முடிவெய்தினார்)

இதழ் வெளியிட எந்த நிதி இருப்பும் இல்லை. ஆனால் வார ஏடாக முதல் இதழ் வெளியிடப்பட்ட அடுத்த நாளே பத்ரி நாராயணன் பகுதி பொங்கல் விழாக் குழுவினரோடு எனது திருவான்மியூர் இல்லம் தேடி வந்து பொங்கல் விழாவுக்காக திரட்டப்பட்ட நிதியில் மீதமான தொகையை விழாக் குழுவினரின் ஒப்புதலோடு கழக ஏட்டுக்கு வழங்குகிறோம் என்று கூறி ரூ.25,000 நிதியை வழங்கினார். ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏடு வெளி வந்ததே தோழர் பத்ரிநாராயணன் வழங்கிய அந்த நிதியிலிருந்துதான் என்பதை பெருமையுடன் சுட்டிக்காட்ட வேண்டும்.

பெரியார் திராவிடர் கழகத்திற்கு இராயப்பேட்டை சைவ முத்தையா 5ஆவது தெருவில் 17.9.2001 அன்று முதன்முதலாக ஒரு தலைமையகம் ‘குத்தகைக்கு’ எடுத்து தொடங்கப்பட்டது. அதற்கான நிதியை தனது சொந்தப் பொறுப்பில் திரட்டி வழங்கியவர் பத்ரிநாராயணன் தான். அதற்காக அலுவலகத் திறப்பு விழாவில் பத்ரி நாராயணனுக்கு ஆடை போர்த்தி கவுரவிக்கப்பட்டது. கவிஞர் இன்குலாப் அந்தத் தலைமைக் கழகத்தைத் திறந்து வைத்தார்.

ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்ட 26 தோழர்களுக்கும் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கியபோது பெரியார் திராவிடர் கழகம் சிலிர்த்தெழுந்தது. நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து அடுத்த நாளே கழகம் கண்டன சுவரொட்டிகளை ஒட்டியது. பத்ரி, கேசவன் உள்ளிட்ட 10 தோழர்கள் கைது செய்யப்பட்டு 22 நாள் சிறைவாசத்துக்குப் பிறகு பிணையில் விடுதலையானார்கள். பழ. நெடுமாறன் தலைமையில் நடந்த தூக்குத்தண்டனை எதிர்ப்பு இயக்கத்தில் பத்ரி உள்ளிட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் பங்கேற்று தமிழகம் முழுதும் பரப்புரைப் பயணத்தில் முக்கிய பங்காற்றினார். இராயப்பேட்டை பகுதி சார்பில் வழக்கு நிதியாக ரூபாய் ஒரு இலட்சம் திரட்டி, இராயப்பேட்டையில் நடந்த தூக்குத் தண்டனை எதிர்ப்பு மாநாட்டில் (1998 ஆகஸ்ட் 26) இரண்டாம் தவணையாக கழக சார்பில் வழங்கப்பட்டது. நிதி திரட்டலில் முழுமையாக செயல்பட்டவர் பத்ரி நாராயணன்.

இராயப்பேட்டை பகுதியில் ‘ரவுடிகள் சாம்ராஜ்யத்தை’ முழுமையாக அனுமதிக்காமல் தடுத்து நிறுத்தினார் என்ற ஒரே காரணத்துக்காக வன்முறையாளர்கள் அவரது உயிருக்கு குறி வைக்கும் காலத்தை எதிர்நோக்கியிருந்தபோது கழகத்தின் ‘துரோகிகள்’ சிலர் கிடைத்தவுடன் அதைப் பயன்படுத்தி பத்ரி நாராயணனை (2004, ஏப்.30)

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கல்வி உரிமைகளை வலியுறுத்தி மே 2இல் தமிழ்நாடு மாணவர் கழகம் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு மாணவர் கழக கலந்துரையாடல் 22.4.18 அன்று சேலம் குரங்குசாவடியில் காலை 11 மணிக்கு துவங்கியது . மாணவர் கழக அமைப் பாளர் பாரி சிவக்குமார் தலைமை தாங்கினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு மாணவர்களின் பல்வேறு சிக்கல்கள் குறித்து விளக்கியும், மாணவர் கழகம் வரும் நாட்களில் எடுக்க வேண்டிய செயல் திட்டம் குறித்தும் பேசினார். மேலும் தோழர்களின் பல்வேறு கேள்வி களுக்கு கழகத் தலைவர் பதில் கூறினார். நிகழ்வில் சென்னை இளவரசன், சேலம் நாகராஜ், விக்னேஷ் அறிவுமதி, இலக்கியன், திருப்பூர் கனல்மதி, தேன்மொழி, பொள்ளாச்சி சபரி, ஈரோடு பிரதாப், கோவை வைத்தீஸ்வரி, பிரசாந்த், நாமக்கல் மனோஜ், சேலம் விக்னேஷ் கவுதம் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

இந்தியாவுக்கே முன்மாதிரியாக சமூகநீதிக் கொள்கையை கடைப் பிடித்து வரும் தமிழகத்தில் மருத்துவப் படிப்புக்கு ப்ளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்தது. இதனால் கிராமப்புற உழைக்கும் மக்களின் பிள்ளைகள், மருத்துவம் படித்து வந்தனர். இப்போது ‘நீட்’ எனும் தேர்வினால் அவர்கள் மருத்துவம் படிக்கும் வாய்ப்பு பாதிக்கப்படுகிறது. ஆகவே ‘நீட்’ தேர்வை நிரந்தரமாக இரத்து செய்ய தமிழ்நாடு மாணவர் கழகம் வலியுறுத்துகிறது.

தமிழ்நாடு முழுவதும் மே மாதம் 2ஆம் தேதி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பு, தமிழக அரசு இயற்றிய ‘நீட்’ விலக்குத் தொடர்பான சட்ட மசோதாவுக்கு இசைவு கோரியும்; மாணவர்களின் பொறியியல் படிப்பைத் தடுக்கும் அரசாணை 51, 52ஐ இரத்து செய்து அவர்களுக்கு முன்புபோல அரசாணை 92ஐ நடைமுறைப்படுத்தக் கோரியும்; கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடஒதுக்கீட்டை முறையாக நடைமுறைப்படுத்தக் கோரியும்; போதிய மாணவர் இல்லை என காரணம் காட்டி அரசு பள்ளிகள் மூடுவதைக் கண்டித்தும்; மண்ணின் மைந்தர்களுக்கே வேலை கொடு - போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென தமிழ்நாடு மாணவர் கழகம் கேட்டுக் கொள்கிறது.

வெளி மாநிலங்களில் உயர் கல்விப் படிக்கும் தமிழக மாணவர்கள் தொடர்ச்சியாக மர்மமான முறையில் இறப்பதைத் தடுக்காத மத்திய, மாநில அரசுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு வெளி மாநிலங் களில் படிக்கும் தமிழக மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு மாணவர் கழகம் கேட்டுக் கொள்கிறது.

தமிழகக் கல்லூரிகளில் மாண வர்கள் ஜாதிய துன்புறுத்தலுக் குள்ளாவது தொடர்ந்து வருவதால் இதனைத் தடுக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துவதோடு, அதைக் கண்காணிக்க பேராசிரியர் தகுதி உள்ள தனி அலுவலரை நியமிக்கும் படி தமிழ்நாடு மாணவர் கழகம் வலியுறுத்துகிறது.

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் 25 சதவீத மாணவர் இடஒதுக்கீட்டை முறையாக நடைமுறைப்படுத்தக் கோரியும், பட்டியலின பழங்குடி மாணவர்களின் பொறியியல் படிப்பைத் தடுக்கும் அரசாணை 51,52ஐ இரத்து செய்யக் கோரியும், மாவட்ட ஆட்சியாளர்களிடம் மனு அளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

மே மாதம் 22, 23 தேதிகளில் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் சென்னையில் தமிழகம் முழுவதும் உள்ள மாணவர் கழகத் தோழர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி வகுப்பு நடத்துவது எனவும் தீர்மானிக்கப் பட்டது.

## தலைமறைவான காமெடி நடிகனை கைது செய்ய வேண்டும்!

பெண் பத்திரிகையாளர்கள் குறித்து, ‘அவர்கள் ஒழுக்கமற்றவர்கள்’ என்று சுடுசொற்களால் முகநூலில் எழுதிய காமெடி நடிகர் எஸ்.வி. சேகர் தலை மறைவாகிவிட்டாராம்.

“இது நான் போடவில்லை; வேறு ஒருவர் அனுப்பிய பதிவை படிக்காமல் அப்படியே அனுப்பி விட்டேன்” என்கிறார் அந்த காமெடிப் பேர்வழி.

வேதங்களையே கரைத்துக் குடித்து, தன்னை ‘பிராமணனாக்கி’க் கொண்டு, அதன் குறியீடான ‘பூணூலை’ தொலைக்காட்சியில் தோன்றும்போதுகூட வெளியே தெரியும்படி காட்டிக் கொள்ளும் இந்தக் காமெடிப் பேர் வழி படிக்காமல் ஒரு செய்தியைப் பதிவிட்டு விட்டதாம்; நாம் நம்ப வேண்டுமாம்!

‘அட சேகரா? நீ ஒரு சந்தர்ப்பவாதி; செத்துப் போன சங்கராச்சாரிக்காக உளவு பார்த்தவன்; நீ தாவாத கட்சியில்லை; ஜெயலலிதா கட்சிக்குப் போனாய்; சட்டமன்ற உறுப்பினரானாய்; பிறகு அவரால் விரட்டி அடிக்கப்பட்டு, பா.ஜ.க.க.வுக்குத் தாவினாய்; அங்கிருந்து தி.மு.க.வுக்கு தாவினாய்; பிறகு ‘பிராமணருக்கு’ தனிக்கட்சி தொடங்கினாய்; எங்கே இருந்தாலும் ஒரு வெறி பிடித்த ‘பிராமணர்’ என்ற அடையாளத்தை மட்டும் மாற்றாமல் இருந்தாய்; இப்போது பா.ஜ.க.வின் அதிகாரமிருக்கிறது என்ற திமிரில் தடித்த வார்த்தைகளை உளறிக் கொண்டிருக்கிறாய்; உன்னுடைய நாக்கை மட்டுமல்ல பூணூலையும் இழுத்து வைத்து அறுக்கும் நாள் விரைவில் வரும்” என்று ஒரு தன்மானத் தமிழன் இந்த காமெடிக்கு முகநூல் பதிவிட்டிருந்தால் அதையும் படிக்காமல் இந்தப் பூணூல் காமெடி மற்றவர்களுக்கு ‘ஃபார்வர்டு’ செய்யுமா?

வெட்கம், மானம், சூடு சொரணையற்ற இந்த ‘பிராமண ஜந்துக்கள்’ இப்படித்தான் அந்தர்பல்டி அடிக்கும். ‘நான் போடவில்லை அட்மின் தான் போட்டார்’ என்று கூறும். பிறகு கோழைத்தனமாக தலைமறைவாகிப் பதுங்கும் இந்த ஆள் வீட்டுக் கதவில் சில மானமுள்ள பத்திரிகையாளர்கள் கற்களை வீசியிருக்கிறார்கள். சேதமடைந்தது இரும்புக் கதவுதான்; ஆனால் இந்த காமெடியின் ‘சாக்கடை’ப் பதிவால் பத்திரிகையாளர்கள் உள்ளம் எவ்வளவு புண்பட்டிருக்கும்? வடிக்க வார்த்தைகள் இல்லை.

கல்லடிக்காக பத்திரிகையாளர்கள்மீது போட்ட வழக்குகளைத் திரும்ப பெற வேண்டும்; பாலுறவு வன்புணர்ச்சி வன்முறையை விடக் கொடுமையான வார்த்தைகளை பெண் பத்திரிகையாளர்கள் மீது விசிய ‘சொல்லுறவு வன்புணர்ச்சியாளனை’ காவல்துறைப் பிடித்து இழுத்து வந்து கைது செய்து சிறையிலடைக்க வேண்டும்; அந்த ‘காமெடி’ப் பேர்வழியை பத்திரிகையாளர்கள் காறி உமிழ வேண்டும்; இதுதான் காமெடிக்குத் தரக்கூடிய சரியான தண்டனை!

## வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை வலியுறுத்தி கருத்தரங்கம்

தமிழ்நாடு முற்போக்கு வழக் கறிஞர்கள் சங்கம் சார்பில் 19.04.18 அன்று சென்னை ஒய்.எம்.சி.ஏ. அரங்கில் ‘வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் - நெருக்கடிகளும் தீர்வும்’ எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடை பெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மருத்துவர் எழிலன், நீதியரசர் அரிபரந்தாமன், வழக்கறிஞர் ரஜினிகாந்த் உரையாற்றினர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் மீதான சீண்டல்களும், பாலியல் வன்முறைகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது . NCRB - National Crime Records Bureau 2016-ன் அறிக்கைப்படி 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வன்புணர்வு வழக்குகளின் எண்ணிக்கை 39,040. கடத்தப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 66,000. ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களுக்கு காரணமான மதச்சிந்தனைகள், ஆணாதிக்கச் சிந்தனைகளை அடியோடு அழித்தொழிக்கும் பணியில் கரம்கோர்க்க சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களையும் இம்மாநாடு அழைக்கிறது. அத்தோடு பாலியல் வன்புணர்வுக்கு ஆதரவாகப் பேசும் அதிகாரிகள், ஆட்சியாளர்கள் ஆகியோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது. காஷ்மீரில் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டு, கொடூரமாக கொலை செய்யப்பட்ட 8 வயது சிறுமி ஆசிபா குறித்துப் பேசும்போது, ஆசிபா கொலையில் பாகிஸ்தான் சதி உள்ளது என்று மத்தியப் பிரதேச பா.ஜ.க தலைவர் நந்தகுமார் சிங்கும், இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடக்கத்தான் செய்யும் என்று சந்திரபிரசாத் கங்கா என்ற பா.ஜ.க அமைச்சரும், இதுபோன்ற சம்பவங்களை பேசிப் பேசி அதை மேலும் பிரபலமாக்காதீர் என்று மீனாட்சி பா.ஜ.க எம்.பி.யும், இதைப்பற்றி பேசிப் பெரிதுபடுத்தினால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை குறையுமென்று மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி ஆகிய இந்துமத வெறியர்கள் கூறியிருப்பதற்கு இம்மாநாடு வன்மையாகக் கண்டனங்களைத் தெரிவிக்கிறது. பாலியல் வன்புணர்வுகளில் உயிரிழந்த பெண்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் இம்மாநாடு தெரிவிக்கிறது.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டப் பகலில் அதே பகுதியில் படுகொலை செய்துவிட்டனர். அவரது உயிர் குறி வைக்கப்படுகிறது என்பதை முன்கூட்டியே தோழர்கள் எச்சரித்த போதும், ‘நமது தோழர்கள் ஒரு போதும் அச்செயலில் இறங்க மாட்டார்கள்’ என்று நம்பிக்கையுடன் கூறினார். தன்னிடம் ‘சுயநலத்துக்காக’ கருத்து மாறுபாடுகள் கொண்ட தோழர்களையும் அவர் தோழர்களாகவே நேசித்து, திருத்தவே முயன்றார்.

பத்ரியிடம் கோபத்தைப் பார்க்க முடியாது; அளவாகவே உரையாடுவார். மாறுபட்ட கருத்துகளை மட்டும் அழுத்தமாக மென்மையான குரலில் எடுத்துக் கூறுவார். அவரது வாய்மொழியைவிட உடல்மொழி நளினமான வெளிப்படும்; நடைமுறைகளைச் சார்ந்தே அவரது முடிவுகள் இருக்கும். ஆவேசத்தைக் கொட்ட மாட்டார். போராட்டம், கூட்டங்களுக்கான அத்தனை ஏற்பாடுகளிலும் அவரது உழைப்பு இருக்கும். ஆனால் மேடை ஏற மாட்டார். கேமிராக்களுக்குள் சிக்க மாட்டார். நெருக்கமான தோழர்களை ‘வாத்தியார்’ என்றே அழைப்பது அவரது வழக்கம். பொருளாதாரப் பின்புலம் ஏதுமில்லை. மத்திய அரசுப் பணியிலிருந்த தனது மாமாவின் ‘ஆதரவு - அரவணைப்பு’டன் வாழ்ந்தாலும் சுயஜாதி உணர்வுகளிலிருந்து அவர் விலகி நிற்க வேண்டிய சூழலில் ‘மாமா’வின் உதவியையும்கூட வேண்டாம் என முடிவெடுத்த கொள்கைக்காரர்.

அவரால் உருவாக்கப்பட்ட தோழர்கள், அவர் உணர்வுகளையும் வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளையும் நெஞ்சில் சுமந்து களப்பணியாற்றி வருகிறார்கள்.

இலட்சியத்துக்காக களப்பணியாற்றியவர்களுக்கு மரணமில்லை; அவர்களின் உணர்வுகள் அடுத்த தலைமுறையை வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

**– விடுதலை இராசேந்திரன்**

**(ஏப்ரல் 30, பத்ரி நினைவு நாள்)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 26th April 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN